### ஊழலில் திளைக்கும் குதிரை பேர பினாமி ஆட்சியால்

# தமிழகத்தின் உற்பத்தி துறை அனைத்தும் வீழ்ச்சியின் விளிம்புக்கு சென்று விட்டது

## மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு



**சென்னை, ஜூன் 27:** ஊழலில் திளைக்கும் குதிரை பேர பினாமி ஆட்சியால் தமிழகத்தின் உற்பத்தித் துறை வீழ்ச்சியின் விளிம்புக்கு சென்று விட்டது என்று மு.க.ஸ்டாலின் குற்றம்சாட்டியுள்ளார்.

திமுக செயல் தலைவரும், சட்டமன்ற எதிர்கட்சி தலைவருமான மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழக உற்பத்தித்துறை 2016-17ம் ஆண்டில் மிகப் பெரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது என்று ரிசர்வ் வங்கி வெளியிட்டிருக்கும் அறிக்கை அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. அதிமுக ஆட்சியில் தொழில் வளர்ச்சியும், தொழில் முதலீடுகளும் எப்படி மோசமான பாதையில் பின்நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்பதற்கு, இந்த அறிக்கை மிக முக்கியமான சான்றாவணமாகத் திகழ்கிறது.

அரசால் அறிவிக்கப்பட்ட 'தொலைநோக்கு திட்டம்-2023' அயர்ந்து தூங்குகிறது. அத்திட்டத்தின் படி முதலீடு செய்யப் போவதாகச் சொன்ன 15 லட்சம் கோடி 'வெற்று அறிவிப்பாகவே' இருக்கிறது. உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் போடப்பட்ட 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 'அதோ கதி' நிலைக்கு வந்து விட்டன.

₹2.42 லட்சம் கோடி முதலீடுகள் கிடைக்கப் போகிறது என்று சொன்னக் கணக்கு, ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது என்ற நிலையை எட்டிவிட்டது. இதுபோன்ற சூழ்நிலையில் தான் 2016-17ம் ஆண்டில் வெறும் 1.65 சதவீத வளர்ச்சியை மட்டுமே உற்பத்தி துறையில் பெற்று தமிழகம் வரலாறு காணாத அளவிற்கு, தொழில் வளர்ச்சியில் 'மிகப்பெரிய வீழ்ச்சியை' அதிமுக ஆட்சியில் சந்தித்து இருக்கிறது.

இத்தனை மோசமான நிலையில், வளர்ச்சிப் பாதையில் நகராமல் அமர்ந்து கொண்டிருக்கும் அதிமுக அரசின் சார்பில்தான் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தப் போகிறோம் என்று 'பகட்டு' அறிவிப்பு வெளியிடுகிறார்கள். உற்பத்தி துறையில் ஆந்திர மாநிலம் 10.36 சதவீத வளர்ச்சியும், தெலுங்கானா மாநிலம் 7.1 சதவீத வளர்ச்சியும் அடைந்துள்ள நிலையில், உண்மைக்கு புறம்பான தகவல்களை இந்திய தொழில் கூட்டமைப்பின் மாநாட்டில் கலந்து கொண்ட முதல்வர் பேசி இருப்பது, தொழில் முதலீட்டாளர்கள் மத்தியில் தமிழகத்திற்கு பெருத்த தலைகுனிவை தேடித் தந்துள்ளது. தொழில் வளர்ச்சியில் சரிவு ஏற்பட்டதற்கு 'நிலையில்லா ஆட்சியும்', அதிமுக ஆட்சியில் தொழில் தொடங்க பேசப்படும் பேரங்களும் தான் காரணம் என்பது 'கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை' என்ற பழமொழியை நினைவுபடுத்துகிறது. தமிழகம் தொழில்துறையில் முதலிடம் என்ற பல்லவியைப் பாடி, புதிதாக தொழில் தொடங்க வெளியிடப்பட்ட 110 அறிவிப்புகள் குறித்த "வெள்ளை அறிக்கை" வெளியிடவும் மறுத்து, சட்டமன்றத்திற்கும் தொழில் வளர்ச்சி குறித்த உண்மை தகவல்களை தர இந்த அரசு மறுப்பது ஜனநாயக விரோத செயல் மட்டுமல்ல, இந்த மாநிலத்தின் வளர்ச்சியில் அக்கறையில்லாத செயல் என்பதை வேதனையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதிமுகவிற்குள் பதவிக்கு நடக்கும் அடிதடிகள், டெண்டர்களுக்கும், நியமனங்களுக்கும் நடக்கும் வசூல்கள், கரைபடிந்து போன கமிஷன் கலாசாரங்கள், எங்கும் ஊழல் எதிலும் ஊழல் என்ற நிலைப்பாடு போன்றவற்றால் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி அதிமுக ஆட்சியில், குறிப்பாக இந்த 'குதிரை பேர' ஆட்சியில் அதள பாதாள வீழ்ச்சியின் விளிம்பிற்கே சென்றுவிட்டது. அலங்கோலமான நிர்வாகம், சர்வாதிகாரமான சட்டமன்றம், ஊழலில் புரையோடிக் கொண்டிருக்கும் அமைச்சர்கள் என்று படுமோசமான நிலையில் நடைபெறும் இந்த அதிமுக அரசுக்கு எதிராக மக்கள் எரிமலையாக குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே உற்பத்தித் துறையில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தொழில் துறையிலும் தமிழகம் இந்த 'குதிரை பேர' ஆட்சியில் பின்னுக்குப் போய், இளைஞர்களின் வேலை வாய்ப்புகளை மிக மோசமாக பாதித்துள்ளது. ஏற்கனவே 5 லட்சம் கோடி ரூபாய் கடனில் இருக்கும் மாநிலத்தின் பொருளாதாரத்தையும், நிதி நிலைமையையும் மோசமடைய வைத்துள்ளது. ஆகவே அனைத்து துறைகளிலும் தமிழகத்தை பின்னோக்கி அழைத்துச் சென்று கொண்டிருக்கும் இந்த 'குதிரை பேர' ஆட்சி முடிவுக்கு வருவது மட்டுமே தமிழகத்தை காப்பாற்றும் ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கையாக இருக்க முடியும்.

NCPCR
சत्यमेव जयते

**தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்**

5வது தளம், சந்தர்லோக் வளாகம், 36 ஜன்பாத், புதுடெல்லி - 110001 தொலைபேசி: 23478200

இணைய அச்சுறுத்தல், இணைய கடத்தல், வலைதள பாலியல் கொடுமை, குழந்தை ஆபாசப்படங்கள் ஏனையவை போன்ற குழந்தைகளுக்கு எதிரான இணைய குற்றங்கள் அதிகரிப்பதை கருத்தில் கொண்டு, ஆணையமானது குழந்தை பாலியல் வன்கொடுமைக்காக ஒரு வலைதள முழு ரகசிய நேரடி புகார் பதிவு முறை, POCSO e-box அமைக்க முடிவு செய்துள்ளது, தற்போது இணைய குற்றங்கள் வழக்குகளை பதிவதற்கும் பயன்படுத்தலாம்.

இணைய குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தை தனது புகார்களை POCSO e-box: www.ncpcr.gov.in, மின்னஞ்சல்: pocsoe box-ncpcr@gov.in, கைபேசி எண்: 9868235077 ஆகியவற்றில் பதிவு செய்யலாம்.

e-box
Press This Button

davp 46108/13/0003/1718



कयर बोर्ड
COIR BOARD
Ministry of MSME, Government of India

SAVE NATURE.. USE COIR
Coir.. the Strongest Natural Fibre

JUNE 27
INTERNATIONAL MSME DAY
MSMEs for Global Development

NEW INITIATIVES IN COIR SECTOR

**Coir Udyami Yojana**
- Assistance to projects up to Rs.10 lakhs
- 40% subsidy with working capital up to 25% of the project cost
- 5% beneficiary contribution
- 55% Bank loan

Marketing Support Assistance to Beneficiaries

**ASPIRE**
A Scheme for Promoting Innovation, Rural Industry and Entrepreneurship
- Various short-term training courses on modern technologies in coir sector
- Experienced Mentoring
- Supports for preparing various projects
- Provides guidance for becoming an enterpreneur

**Coir Vikas Yojana**
- Skill Upgradation: Training with Stipend
- Scheme for Development of Production Infrastructure
25% subsidy on project cost exceeds Rs. 10lakhs

Domestic Market Promotion
10% Market Dev. Assistance

Prime Minister Suraksha Bima Yojana for coir workers

Export Market Promotion
100%Assistance on Travel and space rent to participate in International Fairs

Mahila Coir Yojana
75% subsidy up to 7500/- on coir processing equipments for women empowerment

FRANCHISEES ARE INVITED FOR MARKETING COIR PRODUCTS

For More Details: www.coirboard.gov.in
Toll free No. 1800 425 9091
Coir House, M.G.Road, Kochi-682 016, Kerala.
Ph: 0484 2351900. Email: info@coirboard.org

1 NATION TAX MARKET
GST
COMMITTED TO TAXPAYER SERVICES

> சரக்கு மற்றும் சேவைவரிக்கு தயாராகுங்கள் >>

சரக்கு மற்றும் சேவைவரி 1 ஜூலை, 2017 முதல் அமலுக்கு வருகிறது

**சரக்கு மற்றும் சேவைவரி சிறு வணிகர்கள்/தயாரிப்பாளர்கள்/உணவகங்களுக்கு பெரும் நிம்மதி அளிக்கிறது**

ஆண்டு விற்றுமுதல் ₹20 லட்சத்துக்கு* கீழான தயாரிப்பாளர்/சேவை வழங்குனர்/வணிகர் சரக்கு மற்றும் சேவைவரி எதுவும் செலுத்த வேண்டியதில்லை மேலும் பதிவுபெற வேண்டியதில்லை.

ஆண்டு விற்றுமுதல் ₹75 லட்சம்# வரையானவர்கள் தொகுப்பு திட்டத்தை தேர்ந்தெடுக்கலாம் இவ்வகையில் வரி விகிதங்கள் பின்வருமாறு இருக்கும்:-




சரக்கு மற்றும் சேவைவரி தொகுப்பு விகிதம்

| வணிகர்கள் | தயாரிப்பாளர்கள் | உணவகங்கள் |
|---|---|---|
| 1% | 2% | 5% |

- சேவை துறையில், தொகுப்புத் திட்டம் ஒரு துறைக்கு மட்டும் கிடைக்கப்பெறும் - உணவகங்கள்.
- தொகுப்புத் திட்டம் புகையிலை தயாரிப்பாளர்கள் மற்றும் தயாரித்த புகையிலை மாற்றுப்பொருட்கள், பான்-மசாலா & ஐஸ்-கிரீம் மற்றும் கொக்காய அடங்கிய அல்லது இல்லாத பிற உட்கொள்ளும் ஐஸ் ஆகியவைக்கு கிடைக்கப்பெறாது.
- தொகுப்புத் திட்டத்தை தேர்ந்தெடுத்த விற்பனையாளர்கள் மொத்த விற்றுமுதல் விவரங்களுடன் ஒரே ஒரு காலாண்டு ரிட்டன் தாக்கல் செய்ய வேண்டும். விவரங்களுடன் கூடிய பட்டியல் (Invoice) தேவையில்லை, வழங்கல் பட்டியல் போதுமானதாகும்.
- சிறு வரிசெலுத்துவோர்கள் தங்கள் ரிட்டன்களில் HSN குறியீடு கொடுக்க வேண்டியதில்லை.
- இருந்தபோதும், இந்த வாய்ப்பில், உள்ளீட்டு வரி வரவு எடுத்துக் கொள்ள அல்லது மாற்றிக் கொள்ள முடியாது.
- வலைதள பதிவு, ரிட்டன், பணப்பட்டுவாடா, வாபஸ்தொகை & பிற செயல்பாடுகளால், தாமதங்கள் மற்றும் வேறுபாடுகள் குறையும்.
- குறைந்த கீழ்ப்படிவு பொறுப்புசுமை.
- சரக்கு மற்றும் சேவைவரி நிர்வகிப்பில் பகிர்வு பணியாளர்களுக்கு உதவ பகிர்ந்தளிக்கப்பட்ட பணிக்கான சிறப்பு விலக்கு.

- இந்த வரம்பு அஸ்ஸாம், அருணாச்சல பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, மிசோராம், நாகாலாந்து, திரிபுரா, சிக்கிம், உத்தரகாண்ட் மற்றும் இமாச்சல பிரதேசம் ஆகியவைகளுக்கு ₹10 லட்சமாகும்.

# இந்த வரம்பு அஸ்ஸாம், அருணாச்சல பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, மிசோராம், நாகாலாந்து, திரிபுரா, சிக்கிம் மற்றும் இமாச்சல பிரதேசம் ஆகியவைகளுக்கு ₹50 லட்சமாகும்.

davp 15502/13/0059/1718

தொகுப்புத் திட்டம் மீதான மேல் விவரங்களுக்கு, காண்க www.cbec.gov.in

ஜிஎஸ்டி விசாரணைக்கு @askGST_GoI டுவிட் செய்யவும்

மத்திய கலால் மற்றும் சுங்கம் வாரியம் &
மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் வணிகவரித் துறை
www.cbec.gov.in